சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
வைகாசி 30
றஜப். 7
புதன் (14-6-1978)
நிருவியது 1947
புத்தகம் 32
இதழ் 4
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35



# "ஜெயக்குமாரை நிர்வாணமாக்கி 'பெல்ட்' பட்டியால் அடித்தனர்!"

## பரமானந்தனை நெருப்பில் 'ரோஸ்ட்' செய்தனர்!

## பொலிஸ் காட்டுமிராண்டித்தனத்தை அரசுப்பேரவையில் அமிர் அம்பலமாக்கினார்!

## "கத்தோலிக்கத் துறவிகளும் பொலிசாரால் அவமதிக்கப்படுகின்றனர்"

கைதுசெய்யப்படும் தமிழ் இளைஞர்களை காவல்துறையினர் சட்டவிரோதமான முறையில் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குவதையும், வாகனங்களைச் சோதனையிடுவதாக கூறிக்கொண்டு கத்தோலிக்க குருமார்களையும் பொதுமக்களையும் காவல்துறையினர் அவமானப்படுத்துவதையும் தேசிய அரசுப்பேரவையில் (8.6.78ல்) ஒத்திவைப்பு பிரேரணைமீது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் காரசாரமாகக் கண்டித்தார். அரசாங்கக் கட்சியினரின் கூச்சல்கள், இடையீடுகளுக்கு மத்தியில் திரு. அமிர்தலிங்கமும், ஏனைய கூட்டணி பா.உ.க்களும் சபையில் உணர்ச்சியுடன் வீரகர்ச்சனை புரிந்தனர்.

தேசிய அரச பேரவை 8ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு சபாநாயகர் திரு. ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் தலைமையில் கூடியது.

பேரவையில் ஒத்திவைப்பு பிரேரணை வேளையின்போது எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மூன்று விடயங்கள் குறித்து கேள்வி எழுப்பினார்:

முதலில் ஜெயக்குமார் உட்பட 12 பேர் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டது பற்றி அவர் பேசுகையில், "ஜெயக்குமாரின் சத்தியக் கடதாசி ஒன்றின் போட்டோ ஸ்டாட் பிரதியை சபையில் காட்டி அதனை வாசித்தார்.

அந்த சத்தியக் கடதாசியிலிருந்து அவர் வாசித்ததாவது:- "10-5-78இல் காலை 10 மணிக்கு ஜெயக்குமார் இன்னும் 11 பேருடன் கைது



செய்யப்பட்டார்; அக்ரோ டெக்னிகல் பண்ணையிலிருந்தும் இன்னுமொரு பண்ணையிலிருந்தும் காவல்துறையினரும் இராணுவத்தினரும் இவர்களை கைது செய்தனர். வவுனியாவில் கன்ருட்டியில் இரண்டு பண்ணைகளும் உள்ளன.

"இராணுவத்தினரும், காவல்துறையினரும் ஜெயக்குமாரை தாக்கினர். பட்டன் பொல்லால் ஜெயக்குமாருக்கு அடித்தனர். பண்ணையிலிருந்த வீட்டை இராணுவத்தினரும் காவல்படையினரும் உடைத்தனர்.

"வவுனியாவிலுள்ள காவல்துறை அலுவலகத்துக்கு இவர்கள் கொண்டு வரப்பட்டனர். அங்கு ஜெயக்குமாரின் ஆடைகளைக் களைந்து அவரை நிர்வாண கோலமாக்கினர். அதன் பின் பெல்ட்பட்டியால் அவரை அடித்தனர். அவரது தலையிலும் உடலிலும் தாக்கி அறையில் போட்டு பூட்டினர்.

"மறுதினம் பிற்பகல் 5.30 மணிக்கு ஜெயக்குமார் மற்றவர்களுடன் வவுனியா நீதவானிடம் கொண்டு செல்லப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார் எனினும் இவர்கள் நீதவான் முன்னிலையில் நேராக ஆஜர் செய்யப்படவில்லை.

"அனுராதபுரம் விளக்கமறியல் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு ஜெயக்குமார் தாக்கப்பட்டார்.

"ஜெயக்குமாரை தாக்கிய காவல்துறையினர், இராணுவத்தினர் யார், யார் என்று தெரியாது.

"ஜெயக்குமார் போன்றே, ஏனைய 11 பேரும் சித்திரவதை செய்யப்பட்டனர்.

"ஏனைய 11 பேரதும் பெயர்கள் வருமாறு! போல் ஜஸ்டீன், கொழும்பு-13. கே. ஏ. பாலநடராசா, சுண்ணுகம். வே. பத்மநாயகம், கரவெட்டி, மடுரோட். ஏ.எம். தியாகநாதர், குருமன்காடு, வவுனியா. வீரசிங்கம் ஞானசேகரம், அச்சுவேலி, இராஜேந்திரம் கொழும்பு-4, எம். கைலைநாதன், யாழ்ப்பாணம். கு.எம். பவானந்தன், யாழ்ப்பாணம். எஸ். ரவீந்திரன், யாழ்ப்பாணம். ரி. ராஜசிலன், வவுனியா. வே. ஜெயரட்ணம், வவுனியா"— இவ்வாறு சத்தியக் கடதாசியிலிருந்து திரு. அ. அமிர்தலிங்கம் வாசித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:- "இவர்களின் விஷயத்தை ஜனாதிபதியினதும், பிரதமரதும் கவனத்துக்கு கொண்டுவருமாறு இவர்களது வழக்கறிஞர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

"ஜெயக்குமார் ஒரு தகுதி பெற்ற பொறியிலாளர். இவர் இப்போது வவுனியாவில் விவசாயம் செய்து வருகிறார்.

"ஜெயக்குமாரின் சகோதரர் ஒரு பாதிரியாரான வண. பிதா செல்வரட்ணம் ஆவார்.

"இந்த பண்ணையின் சொந்தக்காரர் அருளப்பு. அவர் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர். அவருக்கு வன்செயல்களில் தொடர்பு இருக்கும் என்று நினைக்க முடியாது.

"இதன் பின்னரும் இந்த மாதிரி நடக்கக்கூடாது என்பதால் இதை சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

"காவல்துறையினர் கைது செய்யும் இளைஞர்களை அடித்துக் காயப்படுத்தி விட்டு பின்னர் அவர்களின் காயம் ஆறும் மட்டும் அடைத்து வைத்திருக்கிறார்கள். காயம் ஆறியபின் வெளியே விடுகிறார்கள்.

"பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட இன்னுமொருவர் மன்னாருக்கு விசாரணைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் பெயர் பரமானந்தன்.

"விசாரணை நடத்துவதை நாம் எதிர்க்கவில்லை, ஆனால் அவர்கள் துன்புறுத்தப்படுவதைத் தான் நாம் ஆட்சேபிக்கின்றோம்.

"பரமானந்தனை நெருப்பில் 'ரோஸ்ட்' செய்து எடுத்திருக்கிறார்கள். அவரது இரண்டு கைகளையும் ஒரு மரத்திலும், இரண்டு கால்களையும் இன்னுமொரு மரத்திலுமாக கட்டிப்போட்டு கீழே நெருப்புச் சட்டி வைத்து கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள்.

"அவ்வாறு மரத்தில் கட்டிப் போட்டுவிட்டு கீழே நெருப்பு வைத்திருக்கிறார்கள். நெருப்பு வைத்து விட்டு காவல்துறையினர் அங்கிருந்து சென்று விட்டனர், பரமநாதன் அவஸ்தை

—4ம் பக்கம் பார்க்க

### பரமானந்தன் பிணையில் விடுதலை!

இத்தாலிக்கு பயணமாவதற்கு கட்டுநாயகா விமான நிலையத்துக்கு சென்றபோது, அங்குவைத்துப் காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டு, கடந்த இருமாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இணுவிலைச் சேர்ந்த இளைஞர் கனகசபை பரமானந்தன் மன்னார் நீதவானால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

### பிறந்தநாளிலும் கருணாநிதியின் சிந்தனை முழுவதும் ஈழதமிழர் மீதுதான்!

"மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டிய எனது பிறந்த நாளில், இலங்கையில் மீண்டும் அவதிக்கும், அடக்குமுறைக்கும் ஆளாக்கப்படுகிற தமிழ் சமுதாயத்தினரை எண்ணி நான் கண்கலங்கத்தான் வேண்டியிருந்தது. ஆம், நம்கழகத்தின் இதயமே, இலங்கையில் தமிழர்க்கு எந்த இன்னலும் நேரிடக்கூடாது என்றுதான் ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிறது. உலகுமுழுவதும் பரவிக்கிடக்கிற தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக திமுகதிகழ்கிறது. அந்த நம்பிக்கை கூனிப்போகவோ குறுகிப்போகவோ—திமுக ஒரு நாளும் இடமளியாது!"

—இவ்வாறு திமுக தலைவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் உடன் பிறப்புக்கு எழுதியுள்ள முரசொலிக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

### விடுதலையான ஐவர்!

விசாரணைக்காக தம்மைத் தாமே காவல்துறையினரிடம் ஒப்புக்கொடுத்த 25 தமிழ்ஈழ தேசபக்தர்களில் இதுவரை ஐந்துபேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (இ. போ. ச.) சுப்பிரமணியம், பாலரத்தினம், கணேசரத்தினம், சந்திரகுமார், சபாரத்தினம் ஆகியோரே அவ்வாறு விடுதலை செய்யப்பட்ட ஐந்து பேராவர். இன்னும் 23 பேர் விசாரணைக் கைதிகளாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

### "தமிழுக்குத் தலைவன் இவனே இவன் பெயர் அமிர்தம்"

#### சீர்காழி பாட்டு!

கொழும்பு ஜிந்துப்பிட்டி சிறீசிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் இசைமணி சீர்காழி கோவிந்தராஜனின் அருமையான இசைக்கச்சேரி இடம் பெற்றது. சீர்காழியின் இசைக்கச்சேரியை இரசித்தபடி எதிர்க்கட்சித்தலைவர் நாவலர் அ. அமிர்தலிங்கமும் மேடைமீது அமர்ந்திருந்தார். சீர்காழி கோவிந்தராஜன், "தமிழுக்கோர் தலைவன்—முருகன்" என்ற பாடலைப் பாடத்தொடங்கி "தமிழுக்கோர் தலைவன்..." என்ற அடியை முடிப்பதற்குள் கூடியிருந்த ரசிகர்கள் "அமிர்தலிங்கம், அமிர்தலிங்கம்" என்று குரல்கொடுத்தனர். ஒவ்வொருமுறையும், சீர்காழி "தமிழுக்கோர் தலைவன்" என்ற பாடல் அடியைத் தொடங்க "அமிர்தலிங்கம்" என்று ரசிகர்கள் குரல்கொடுத்தனர். அப்போது சீர்காழி கோவிந்தராஜன் தமது தலைவன் மீது தமிழ்மக்கள் கொண்டிருக்கும் பேரன்பைக் கண்டு உள்ளத்தில் உவகை பொங்க, "தமிழுக்குத் தலைவன் இவனே— இவன் பெயர் அமிர்தம்"—என்று திரு. அமிர்தலிங்கத்தைப்பார்த்துப் புன்னை பூத்துக்கொண்டே பாடிய போது இரசிகர்கள் பலத்த கரவொலி எழுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைமாநகர் திரண்டது செல்வா புகழைப் பாடியது!

ஈழத் தமிழர் தம் காவல்தெய்வமாம் செல்வா அவர்களது நினைவுநாள் சென்னையில் இரண்டு இடங்களில் நடந்தன!

ஒரு நிகழ்ச்சியை நேரிற் சென்று முழுமையாகக் கண்டேன். மற்றதை நண்பர்கள் வாயிலாகக் கேட்டு மகிழ்ந்தேன்!

"ஒரு நினைவுநாள் அத்துணை உற்சாகம் தருகிறதா?" —உலகில் சிலர் இப்படியும் கேட்கக்கூடும்!

உண்மையில், சென்னையில் நடந்தது வெறுமனே தந்தை செல்வா நினைவுநாளாக மட்டும் அமையவில்லை. அது தமிழர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் நாளாகவும் அமைந்துவிட்டது. —பெருஞ்சித்திரனார் சொன்னபடி!

செல்வா அவர்கள் முதலாமாண்டு நினைவுநாள் விழா இவரது யாழ் மண்ணில் நடந்த அதேநேரத்தில்தான், தமிழனுக்கு இந்த இழிநிலையா என்று வருந்தும் ஏக்கப் பெருமூச்சு என்றால், மற்றொன்று எங்கே பகை எனத் தேடும் கணை வீச்சானது! ஒன்று கண்ணீர்மழை என்றால், மற்றது புரட்சிக்கனல் ஆனது!

வரவேற்றுப் பேசியவர் தோழர் எத்திராஜ். அவர் இந்தக் கூட்டம் ஏன் என்பதை விளக்கினார். "சொல்லாலும் பண்பாலும் தமிழரை ஒன்று சேர்த்தார்!" —இது தோழர், தந்தை செல்வாவுக்குச் சூட்டிய புகழாரம்! ஈழ விடுதலைப் போர், அதைத் துவக்கிய செல்வா ஆகியோரின் வரலாற்றை சுருக்கமாக—ஆனால் மாற்றார் மனதில் சுருக்கெனத் தைக்கும் வண்ணம் சொன்னார். சுவையான நூலுக்கு வாய்த்த அழகான முன்னுரையானது, இவர் இக்கூட்டத்திற்கு ஆற்றிய வரவேற்புரை.

முதல் பேச்சாளர் சக்தி தங்கையா. அவர் சரியாகவே பொலிசாரால் — சாண்டர்சன் என்ற வெள்ளைப் பொலிஸ் அதிகாரியின் தூண்டுதலால்— தடிகளாலடிக்கப்பட்டார். அந்த நிகழ்ச்சியை அறிந்ததுண்டு—நாலா புறமிருந்தும் லஜபதிராய் மீது அம்பு மழைபொழிவதாக — அந்தத்தடியடியைச் சித்தரித்து—நாற்பது நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு படம் வந்ததுமுண்டு.

ஆனால், தமிழுக்காகத் தடியடிப்பட்ட தந்தை செல்வர வரலாறு தமிழர்க்குத் தெரியாது. 'தேசியம்' செய்த நாசவேலை அது.

தந்தை செல்வா தடியடிபட்ட செய்தியைத் "திரைநீதி" செல்வம் சொல்லிக்கொண்டு வருகையில் எனக்கு மற்றோர் அம்சமும் நினைவிற்கு வந்தது.

லஜபதிராய் பட்ட வேதனைக்கு— அவரை அடிக்கச் சொன்ன அதிகாரி சாண்டர்சனைச் சுட்டுக் கொன்றதன்

"அயல் நாட்டு விவகாரங்களில் தலையிடலாமா?" என்பது அவர்களது கேள்வி.

நெறித்த புருவத்துடனும் சுளித்த முகத்துடனும் இவர்கள் "வெளியார் விவகாரத்தில் நாம் தலையிடக் கூடாது! என உபதேசமும் புரிவர்.

ஐ. நா. சாசனத்தில் மனித உரிமைகளை ஏன் வலியுறுத்தினார்கள் என்பதையே வசதிக்காக மறந்துபோனவர்கள் அவர்கள்.

பேச்சினிடையே அவர்களுக்கும் பதிலளித்தார் மணவை. பூட்டோவுக்குத் தூக்கு விதிக்கப்பட்டிருக்கும் விவகாரத்தைக் குறிப்பிட்டார்,

"பூட்டோவை விடுவிக்க வேண்டுமென்று எங்கோ இருக்கிற கடாபிபேசுகிறான். அதையும் கேட்டுக்கொண்டிருக்கிறது உலகம். இங்குள்ள தமிழன் இலங்கையைப் பற்றி பேசினால் மட்டும்வெளிநாட்டுக்கொள்கை



திரு. மணவைத்தம்பி

லையே!" என்று தமிழனின் வெட்கக்கேட்டை வர்ணித்தது தோழியர் தன்மானத்தின் தாயுள்ளம்;

"ஐ. நா. அவையில் எந்தப் பிரச்சினையையும் பேசலாம். பேசவும் ஆட்கள் இருக்கிறார்கள், ஆனால், தமிழன் பிரச்சினையைப் பேசமட்டுப் பிரதிநிதி இல்லையே! இது தமிழனுக்கெனத் தனி ஒரு

## "100 இலட்சம் சிங்களவர்களுக்கும் ஒரு நாடு ஏழரைக்கோடி தமிழர்களுக்கு நாடில்லையே!"

சென்னையில் இந்த இரண்டு கூட்டங்களும் நடந்தன.

ஒன்று தந்தை பெரியார் திடலில் நடந்தது. தமிழ் ஈழ நட்புறவுக்கழகம் ஏற்பாடு செய்தது. மற்றது, தியாகராய நகரில் பெரியார் நினைவுத்திடலில் நடந்தது. நினைவுத்திடல் என்றதும் உங்களுக்கு ஒன்று புரிந்திருக்க வேண்டும் ஆம்! இது காலமெல்லாம் ஊர் ஊராய்ச் சுற்றித் தன்மானங்காத்த தந்தை பெரியார் கடைசியாகப் பொதுக்கூட்டம் பேசியஇடமாகும்! முன்னெல்லாம் இதை தியாகராயநகர் பேருந்துத்திடல் என்றுதான் சொல்வோம். இப்போது இது நினைவுத்திடலாக—தந்தை பெரியார் கடைசியாகப் பேசிய இடம் என்ற நினைவுத்திடலாக ஆகிவிட்டது. இங்கேதான் இலங்கைக் குடிபெயர்ந்தோர் நலஉரிமைச்சங்கம் நடத்தியநினைவுநாள்கூட்டம் நிகழ்ந்தது.

ஒரு நினைவுநாள் நிகழ்ச்சியை இவ்வளவு வர்ணிக்க வேண்டுமா என்று புருவத்தை நெறிக்கும் சில உருவங்களும் உண்டு! ஆனால் இது வெறும் நினைவுநாள் இல்லை. துவக்கத்திலேயே கூறியபடி தமிழர்கட்கெல்லாம். நம்பிக்கை ஊட்டும் நாள் இது!

**பெரியார்** நினைவுத்திடல் நிகழ்ச்சிக்கு ஈழத்தமிழர் வாழும் இடமெல்லாம் நேசத்தோடு நினைவுகூரப்படும் உண்மைத் தொண்டர் மணவைத்தம்பி தலைமையேற்றார். பலர் பேசினர். அவைகளெல்லாம் வெறும் பேச்சுக்களில்லை. இன்று தமி சொன்னார், "சரித்திரநாயகனை நினைவுகூரும் கூட்டம் இது!" என்று! அந்த சரித்திரநாயகனின் பணிகளை விளக்கிடவும் செய்தார் சற்று!

"தாய்த்தமிழகத்தில் தமிழர்களைத் தட்டி எழுப்பப் பாடுபட்டோர் தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் ஆவர்! ஈழத்தில் தமிழர்களைத் தட்டிஎழுப்பியவர் யார்?" —செ. க. சண்முகம் பேசும் போது இந்தக் கேள்வியை எழுப்பினார். அவரே பதில் சொன்னார் தந்தை செல்வா என்று.

இவரை அடுத்து, இந்நாளுக்கென்றேதான் இயற்றிய பாடலை இசைத்து செல்வாவுக்கு அஞ்சலி செலுத்தினார், தி. மு. கழகப் பாடகர் கூடலூர் கோட்டைச்சாமி.

தோழர் திரைநீதி செல்வம் பள்ளிப்பருவத்தை இலங்கையில் கழித்தவர். எனவே சிங்களவர் கயமையைத்தெற்றெனஉணர்ந்தவர். வெடிக்குரல் பேச்சாளர்இவர். 1956 யூன் ஐந்தாம் நாளன்று இலங்கை நாடாளுமன்றத்தின்முன் தமிழுக்குச் சமஉரிமை வேண்டி தந்தை செல்வா அறப்போர் நடத்தியதையும் கோபம் கொண்ட சிங்களக் காடையர் அவரைத் தடியாலடித்து அவரது பிள்ளைகளை கடலில் தூக்கி எறிந்ததையும் அவர் ஆவேசத்துடன் நினைவுகூர்ந்தார். சென்னைத் தமிழர்களுக்கு அது புதிய சேதி.

ரௌலட் சட்டத்தை எதிர்த்து ஊர்வலம் [illegible] தியதற்காகப் பாஞ்சால மண்ணில் லாலாலஜபதிராய் மூலம்— பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் கணக்குத் தீர்த்தனர். அதனால் அந்த நிகழ்ச்சி வரலாற்றில் பதிந்து விட்டது. ஆனால் தந்தை செல்வா பட்ட வேதனைக்கு இன்னும் கணக்குத் தீர்க்கப்படவில்லை.

கூட்டத் தலைமையேற்ற தோழர் மணவைத் தம்பி, அடுத்து சிறிது நேரம் பேசினார். தந்தை செல்வா அவர்களைப் பறிகொடுத்த துயரம் இன்னும்ஆறவில்லை என்பது போல் கருஞ்சட்டை அணிந்து வந்திருந்தார் அவர். சேனநாயகா காலத்திலிருந்து ஸ்ரீமாவோ காலம் வரை ஈழத்து வேந்தர் என்னென்ன துயரங்களைப் பட்டார் என அவர் அடுக்கடுக்காய் எடுத்து வைத்தார். "கொள்கையை விட்டுவிடு; பதவி தருகிறோம்;" என சிங்களவர் ஆசைகாட்டிய போதும் சீ என்று கூறியவர் செல்வநாயகம்! "பதவிகளை விடத் தமிழர் நலத்தையே பெரிதாக எண்ணியவர் அவர்!" என்றார் மணவை.

தந்தை செல்வாவின் தொண்டையும்; தமிழ் ஈழ மாந்தர் விடுதலைப் போரையும் வர்ணித்துக் கொண்டே வந்தார் அவர், "செல்வாவைப் பாராட்டுவது ஏன்? அவர் தலைவரானது எப்படி? என்ற விபரங்களைச் சொல்வதென்றால், ஈழ மாந்தரின் விடுதலைப் போரையும் விளக்கித் தானாக வேண்டும்; அதற்கு நாம் ஏன் ஆதரவு தர வேண்டும் என்பதையும் சொல்லித்தானாக வேண்டும். இந்த [illegible] பிறப்பதில்லை. தேசியம் பேசும் வட்டாரப் பேர் வழிகள் அவர்கள்.

வருகிறதோ? உகண்டாவில் அடித்தால் வடநாட்டுக்காரர்கள் பேசுகிறார்கள். ஏனென்றால், உகண்டாவில் அடிபட்டவர்கள் வடநாட்டுக்காரர்கள். அந்த நாட்டைச் சுரண்டப்போனவர்கள். அவர்கள் உகண்டாவைப் பற்றிப் பேசும்போது நாம் இலங்கையைப் பற்றி— அங்கே தமிழன் அடிபட்டால் அது பற்றிப் பேசக் கூடாதா?" என்றார் அவர்.

தமிழ் மக்கள் சிந்தனை இப்படியெல்லாம் ஓடுகிறது! அதனால்தான், பூட்டோ விவகாரத்தை மணவைத்தம்பி தொட்டுக் காட்டியபோது கூட்டம் ஆமோதித்தது.

வழக்கமாக "மடமட" எனப் பேசக்கூடியவர் மணவைத்தம்பி. இந்தக்கூட்டத்திலோ அவர் நிதானமாகப் பேசினார். சொற்களை அழுத்தந்திருத்தமாக உச்சரித்தார். ஈழப்பிரச்சினையை அறியாதோர் பலர் கூட்டத்திற்கு வந்திருந்தனர். அவர்களும் பிரச்சினையை அறிய மணவையின் உரை உதவியது.

"உலகின் பல்வேறு நாடுகளில்ஏழரைக்கோடித் தமிழர்கள் வாழ்கிறார்கள். ஆனாலும் தமிழனுக்கென்று தனியாக ஒரு நாடில்லையே! லட்சம் பேரே உள்ள சிங்களவர்கூட ஒரு நாடு வைத்திருக்கிறார்கள், ஆனால்ஏழரைக்கோடித் தமிழ் மக்கள் குரலை எடுத்துச்சொல்ல ஒரு நாடில் நாடில்லாத காரணத்தால் தானே!" என்று கேட்டார் செஞ்சிராமச்சந்திரன் எம், எல். ஏ.

மேலும் பலர் பேசினர்; "பாலத்தீன விடுதலைக்கு மட்டும் வக்காலத்து வாங்குகிறார்களே! ஈழவிடுதலைபற்றி நாங்கள் பேசினால் மட்டும் தவறோ?" என்று கேட்ட தமிழ் மன்னனை அடுத்து, திரு. கோபாலன் எழுந்தார்.

காசி ஆனந்தனின் நேரடி நண்பர்களில் ஒருவர் அவர். சென்னையில் சில ஆண்டுகள் காசி தங்கியிருந்த போது உடனிருந்து அரசியலிலும் இலக்கியத்திலும் திளைத்தவர் அவர். தமிழ் நாட்டில் காசி ஆனந்தன் பாடல்களை, செல்லப்பா பாடிக்கேட்க வேண்டும்! கோபாலன் சொல்லிக் கேட்க வேண்டும்! அவர் இலங்கைச் சரிதத்தைக் கரைத்துக்குடித்தவர். மகாவம்ச வாசகங்களைக் கொண்டே இலங்கையின் வந்தேறிகள் சிங்களவர்கள் தான் என்பதைநிலைநாட்டிக் காட்டினார்.

சொல்லால் கண்ணியம் கெடாமலே பேச்சில் சூடேற்ற முடியும் என்று காட்டினார் கோபாலன். ஈழப்பிரச்சினையை விளக்கிட இவரையும் பெருஞ்சித்திரனாரையும் தமிழகத்தின் ஒவ்வொரு நகரத்திற்கும் அனுப்பிவைத்தாலே போதும், ஒரு புயலே உருவாகும். இது எனது

—4-ம் பக்கம் பார்க்க

தொகுத்தனுப்பியவர்;—
முரசொலி மா பாண்டியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பொலிசார் உங்களை தவறாக வழிநடத்துகின்றனர்! அப்படிப்பட்டவர்களை வேலைநீக்கம்செய்யுங்கள்'

## தேசிய அரசுப்பேரவையில் நவம் விடுத்த கோரிக்கை!

*18-5-78ல் தேசிய அரசுப் பேரவையில் திரு. வி. என். நவரத்தினம் பா. உ. ஆற்றிய உரையை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட தேசிய அரசுப்பேரவைக் குறிப்புப் புத்தகத்திலிருந்து அப்படியே இங்கு தந்துள்ளோம். —ஆர்.*

சபாநாயகர் அவர்களே, வெளிவிவகாரப் பிரதி அமைச்சரைத் தொடர்ந்து நான் பேசுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. இவ் விவாதத்திற் கலந்து கொள்ள வேண்டுமென நான் எண்ணியிருக்கவில்லை. ஆனால், இப்போது நான் சில கருத்துக்களைக் கூறவேண்டிய கடப்பாடு ஏற்பட்டிருக்கிறது.



சபாநாயகர் அவர்களே, குற்றவியல் நடிவடிக்கை முறை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் பற்றிப் பேசிய போது அச்சட்ட மூலத்தை அரசு கொண்டுவருவதில் ஏதாவது அரசியல் உள்நோக்கம் அரசுக்கு இருக்கும் என்று உண்மையாகவே நாம் நம்பவில்லை, குற்றம் சாட்டவில்லை என்று குறிப்பிட்டேன். ஆனால் இப்போது விவாதிக்கப்படும் 'தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இதையொத்தவேறு அமைப்புக்களுக்கும் தடைவிதித்தற் சட்டமூலம்' அரசியல் உள்நோக்கம் உடையது என்பதை நான் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்—

இச்சட்டமூலம் வாயிலாக இப்போது நடைமுறையில்லாத ஒரு சூழலுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான முழு அதிகாரங்களையும் பெற்றுக் கொள்ள அரசு முயல்கிறது. இச்சட்ட மூலத்துக்குப் பொறுப்பாளியானவர் கபட நாடகம் ஆடும் அல்லது வஞ்சிக்கும் குற்றத்திற்கு ஆளாகிறார்.

இப் பேரவையில் ஏதாவது ஒரு சட்ட மூலம் கொண்டுவரப்படுமானால் அது அரசு நேரடியாகப் பெற்றுக்கொண்ட சில உண்மைகளின் அடிப்படையிலும் அரசின் அரசியற் கோட்பாடுகளின் அடிப்படையிலுமே கொண்டு வரப்படும்;

ஆனால், ஆயுதப் படைகளிற் சேவைபுரியும் சிலர் கொடுத்த தகவல்களின் அடிப்படையிலேயே இச் சட்டமூலம் கொண்டுவரப்படுகிறதோ என நான் அஞ்சுகிறேன். தமிழீழ விடுதலைப் புலிகள் என்று ஓர் இயக்கம் இருப்பதாகப் பிரதமர் உண்மையாகவே திருப்தியாக அறிந்துகொண்டாரா? என நான் அவரிடம் வினவ விரும்புகிறேன்.

ஏப்பிரல் மாதம் 28ஆம் தேதி வீரகேசரியில் வெளியான ஆவணம் நம்பத் தகுந்ததுதான் என்பதற்கு ஆதாரம் என்ன? முருங்கன் கொலை, யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த இன்ஸ்பெக்டர் பத்மநாதனின் கொலை, திரு. துரையப்பாவின் கொலை ஆகிய சம்பவங்கள் அனைத்தும் ஒரே இயக்கத்தால் நிகழ்த்தப்பட்டதாக அரசு உறுதியாக அறிந்துள்ளதா? அல்லது இவையெல்லாம் ஒரே குழுவினரால் நிகழ்த்தப்பட்டதாக இவ்விடயங்களில் சிரத்தையுள்ளவர்களும் அரசைப் பிழையான வழியிற் செலுத்திக் கொண்டிருப்பவர்களுமான சிலர் அரசை நம்பச் செய்துள்ளனரா? அரசுக்குத் தகவல்களைத் தருபவர்கள் தாம் கொடுக்கும் தகவல்கள் அனைத்தையும் அதிகாரத்தில்— ஆட்சியில் —இருப்பவர்கள் நம்புவார்களெனக் கருதுவதாலேயே நான் இதனைக் கூறுகிறேன். இராணுவத்தில் அல்லது காவல் துறையிலுள்ள துப்பறிவோர் அரசுக்குக் கொடுக்கும் தகவல்கள் அனைத்தையும் துருவித் துருவி ஆராய்ந்து உண்மை கண்டு பொய்யானவற்றை நிராகரிக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

நாளை நாடெங்கும் ஒட்டுவதற்கான ஒரு சுவரொட்டி தயாராக உள்ளது:-

மு: சிவசிதம்பரம்—அது முன்பே ஒட்டப்பட்டுவிட்டது.

நவம்:— குறிப்பிட்டசிலர் தொடர்பான தகவல்களைத் தருபவர்களுக்கு வழங்கப்படவிருக்கும்பெருந்தொகையான நிதிப் பரிசு பற்றி அதில் கூறப்பட்டுள்ளது. நேர்மையான, வழமையான முறையில் ஒருவரைத்தேடி, அவரைக் கைது செய்யக் கூடிய வாய்ப்பு காவல்துறையினருக்கு இருந்தபோதிலும் அவர் தேடப்படுவதாக வர்த்தமானிமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.காவல்துறையினர் இவர்களைத் தேடிப் பார்க்காதபோது இவர்கள் தேடப்படுகிறார்கள் என அரசினை நம்பவைத்துள்ளனர் என்றால் காவல்துறையினர் அரசினை வேண்டுமென்றே தவறானபாதையிற் செலுத்தி நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கின்றனர் என்பதுதானே அதன் பொருள். இது பிழையானது; அநீதியானது; கேலிக்கிடமானது.

இந்தச் சுவரொட்டியில் புகைப்படம் இடம் பெற்றுள்ளவர்களுட் பெரும்பாலானவர்கள் எங்கு வாழ்கிறார்கள்? எங்கு தொழில் புரிகிறார்கள்? என்பது பற்றி நான் நேரடியாக அறிவேன். இச்சுவரொட்டியில் இடம் பெற்றிருப்பவர்களில் திரு. காசி. ஆனந்தன் ஒருவர். இவ்விளைஞருடையபடத்தை வெளியிடச் சிபார்சு செய்வதன் முன் அவரைத் தேடிக் கண்டு பிடிக்க முயன்றார்களா? ''என்று அரசாங்கம் அல்லது இதற்குப் பொறுப்பான அமைச்சரோ காவல்துறை அதிபரிடம் கேட்டார்களா?

அச்சுவரொட்டியில் அவருடைய முகவரி தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. காவல்துறையினர்எவரவாது அவருடைய இல்லத்திற்குச் சென்றனரா? எப்பொழுது முதல் அவர் தேடப்படுகிறார்? இரண்டு நாட்களுக்கு முன்பு அவர் நீதியமைச்சரின் தொகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் பேசியுள்ளார் அக்கூட்டங்களுக்குகாவல்துறையினர் சென்றுகடமையாற்றியுள்ளனர். அவர் தேடப்படுபவரானால் ஏன் அவரை கைது செய்யவில்லை? ஏன் அவர்கள் அவரை விசாரணை செய்யவில்லை? யாழ்ப்பாணவளாகத்தில் நிகழ்ந்த பொதுக்கூட்டமொன்றில் கூட அவர் பேசினார். இப்பொழுதாவது சில காவல் துறையினர் உங்களைத் தவறாக வழிநடத்திச்செல்வதை நீங்கள் உணர்கிறீர்களா? இதில் தரப்பட்டிருக்கிற தகவலில் மட்டுமல்லாமல் வேறு பல தகவல்கள் தொடர்பாகவும் அவர்கள் அரசை ஏமாற்றி வருகிறார்கள், தவறாக வழி நடத்திச் செல்கிறார்கள் என்பதை உணர்கிறீர்களா? இத்தனைக்கும் பிறகு இச்சட்டமூலத்தை அவர்கள் வழங்கிய விபரங்களின் அடிப்படையில் தயாரித்திருக்கிறீர்கள்.

அச்சுவரொட்டியில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் புதல்வருடைய புகைப்படமும் இடம் பெற்றுள்ளது. முன்னாள் பிரதமர் (சிறிமாவோ) அந்நாள்எதிர்க் கட்சித் தலைவரின் (ஜே.ஆர்.) புதல்வரை விசாரணைக்கு அழைத்துச் செல்லுமுன் அவருக்கு அதுபற்றி அறிவிக்காதது குறித்து இந்நாள் பிரதமர் (பிரேமா) முந்திய விவாதத்தின் போது முன்னாள் பிரதமரை குற்றம் சாட்டினார்; திரு. காண்டீபன் விசாரணைக்காகத் தேடப்படுகிறார் என்று காவல் துறையினர் எப்பொழுதாவது பிரதமருக்கு எடுத்துரைத்தார்களா? அப்படி அவர்கள் கூறியிருந்தால் பிரதமர் அல்லது சனாதிபதி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து, ''சில விடயங்கள் தொடர்பாக விசாரணை செய்ய உமது மகன் தேடப்படுகிறார். அவர் எங்கே? அவரை வருமாறு நீங்கள் ஏன் அவருக்கு ஆலோசனை கூறக்கூடாது?'' என்று கூறியிருப்பார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன். காவற்றுறையினர் அரசு அறியாமலேயே இப் புகைப்படங்களை வெளியிட்டுள்ளனர். பிரதமர் உட்பட ஏனைய அமைச்சர்களின் நல்லெண்ணத்தை நாங்கள் ஐயுறவில்லை என்பதனைக் காட்டவே நான் இதனைக் கூறுகிறேன். சில காவல் துறை அதிகாரிகள் — அதிகாரிகள் அனைவரும் என நான் கூறவில்லை—உங்களைத் தவறாக வழிநடத்திச் செல்கின்றனர். அவர்கள் உங்களைத் தவறான, சட்ட விரோதமான செயல்களைச் செய்யுமாறு நிர்ப்பந்திக்கின்றனர்.

இன்னொரு இளைஞன் வண்ணை ஆனந்தன், அவரது வீட்டு முகவரி அச்சுவரொட்டியில் உள்ளது. எப்பொழுதாவது காவல்துறையினர் அவரது மனைக்குச் சென்று அவர் அங்கு உள்ளாரா என்று பார்த்தார்களா? ''வண்ணை ஆனந்தனின் புகைப்படத்தை ஏன் வெளியிட்டீர்கள்?' என்று காவல் துறை மா அதிபரையோ அல்லது அவரது பிரதிநிதியையோ வினவ அரசுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் இச்சபையின் நடவடிக்கைகளை இப்போது இடைநிறுத்தம் செய்ய நாம் தயாராக உள்ளோம்.காவல்துறையினர் அவரது வீட்டுக்குச் சென்று விசாரித்த போது அவர் அங்கு இல்லையென்றால் அவரைக் காவல் நிலையத்திற்கு வரும்படி ஆலோசனை கூறுமாறு அவரது குடும்பத்தினரைப் பணித்தார்களா? அவர் அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் பணியாற்றுபவர்; நாள்தோறும் அலுவலக வரவுஏட்டில் ஒப்பமிடுபவர்.

மெய்யாகவே, முட்டாள் தனம் மலிந்த காவற்சேவை எமது நாட்டில் இருப்பதாக நான் கருதவில்லை; அவர்கள் இவ்விளைஞரது அலுவலகத்தை அறிவர். எனினும் அவரையும் தேடப்படுபவராகக் காட்டி அவரதுபுகைப்படத்தை வெளியிட்டது ஏன்?

தம்பித்துரை ஜீவராசா என்பவரது புகைப்படமும் இதில் உள்ளது. அவர் எனது தொகுதியில் வாழும் இளைஞர். 1972 முதல் 1976 வரை அவர் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் விடுதலை செய்யப்பட்ட 1976க்குப் பின் இவ்வியக்கத்துடன் தொடர்புகொண்டிருப்பதாக காவல்துறை குற்றம் சாட்டுகிறதா? அல்லது 1972க்கு முன் அவர் செய்த சில செயல்களுக்காக இப்போது அவரைத் தேடுகிறார்களா! அவர் தனது இல்லத்திலேயே வாழ்கிறார். காவலர் அவரது முகவரியைப் 'புகையிரத நிலையவீதி, சாவகச்சேரி' எனக் குறித்துள்ளனர். இவ்வீடு சாவகச்சேரி காவல் நிலையத்திலிருந்து 100 யார் தொலைவில் உள்ளது. அவர்கள் சென்ற போது அவர் இல்லையானால் அவரை வரும்படி ஆலோசனை கூறுமாறு அவரது உறவினருக்குக் கூறினார்களா? சில சம்பவங்கள் தொடர்பாக விசாரணைக்கு வேண்டப்படுபவர்களின் வரிசையில் அவரது புகைப்படம் இடம்பெற்றது ஏன்? இவ்விளைஞரை நகர் காவலர் தேடிச்செல்லவில்லை என்கின்ற உண்மை மாண்புமிகு பிரதமருக்கோ, ஏனைய அமைச்சர்களில் ஒருவருக்கோ தெரிந்திருந்தால் அவர்கள் இப்புகைப்படத்தை வெளியிட இசைவளித்திருக்க மாட்டார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.

உங்களிடம் நல்லெண்ணம் உண்மையிலேயே உள்ளது என்பதை நீங்கள் நிரூபிக்க ஆகக் குறைந்தது ஒன்றினைச் செய்யலாம். இத்தகைய தகவல்களை உங்களுக்குத் தந்த காவல் அதிகாரிகள் அனைவரையும் உடனடியாக வேலை நீக்கம் செய்வதே நீங்கள் இப்போது செய்யக் கூடியது.

திரு. க. துரைரத்தினம்! நடக்கப்போகும்நிகழ்ச்சிகள் அவர்களது உண்மை உருவத்தை காட்டும்!

திரு. நவம்: நடேசப்பெருமாள் கணேசரத்தினம் பற்றியும் நான் குறிப்பிட விரும்புறேன். அவர் 1972இல்கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். பின்னர் துரையப்பா கொலை செய்யப்பட்ட போது அவரை காவலர்கள் தீண்டவில்லை. பரந்தன் இரசாயனப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தில் அவரது வேலையும் ஒழுக்கமும் திருப்திகரமாக இருப்பதாக அவர்கள் உணர்ந்ததேஇதற்குக்காரணமாகும். சாதாரண அரசியலிற் கூட அவர் ஈடுபடாதிருந்ததும் இதற்கு ஒரு காரணமாகும். அவர் பரந்தன் இரசாயனப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றுகிறார் அவர் நாடோறும் வரவுப் பதிவேட்டில் ஒப்பமிடுகிறார். ஆனாலும் இச்சுவரொட்டியில் அவர் பற்றித் தகவல் தருபவர்க்குப் பெருந்தொகைப் பணம் பரிசாக வழங்கப்படும் என்று விளம்பரப்படுத்தப் பட்டதேன்? பரந்தன்இரசாயனப் பொருள்கள் கூட்டுத்தாபனத்துக்குச் சென்று அவரை மிக எளிதாக விசாரணை செய்திருக்கலாமே.

இவ்விபரங்கள் மிகப் பெரும்பாலான இளைஞர்களுக்கும் பொருத்தமாகும். எல்லோருக்கும் என்று நான் கூறவில்லை. மிகப் பலரைப் பொறுத்த வரையில்இதுவே அவர்களது நிலை.

கொழும்பில் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றிய திரு. தம்பித்துரை அவர்களின் புதல்வர் முத்துக்குமாரசாமியின் படமும் இதில் இடம் பெற்றுள்ளது. 1972 முதல் அவர் நீண்ட காலம் தடுப்புக்காவலில் இருந்தார்; பின்விடுதலையானார்; அவர் இப்போது சட்ட மாணவன்; சட்டக் கல்லூரி விரிவுரைகளுக்குச் செல்கிறார். அவருக்கு கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் திட்டமான முகவரி உண்டு.

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# சென்னைமாநகர் திரண்...

—2-ம் பக்கத் தொடர்

கணிப்பு தமிழ் நாட்டு அரசியல் சூழ்நிலை இடம்தருமா?

புலவர் இறைக்குருவன் அடுத்து சிறிது நேரம் அறிந்த தமிழர்களின் உணர்ச்சிகளை விளக்கினர்.

பெருஞ்சித்திரனர்க்கு முன்னதாகப் பேசியவர் மறை. நித்தலின்பன் அவர்கள். அவர்பேச்சு சில செய்திகளைச் சொல்லியது. அதைவிட முக்கியமான சேதியை அவரது தாடி சொல்லியது. ஆம்! விடுதலை கிட்டும் வரை முகத்தை மழித்தல் இல்லை என்ற முடிவு கொண்டவர் அவர். இளந்தாடியோடுநிமிர்ந்துபேசியவர், "குடும்பக்கட்டுப்பாட்டால் தமிழன் கெட்டான்! குடும்பக்கட்டுப்பாட்டால் தமிழன் கெட்டான்!! குடும்பக்கட்டுப்பாட்டால் தமிழன் கெட்டான்!!!" என்று மூன்று முறை அடித்துச் சொன்னர்.

விடுதலைக்காக தாடி வளர்க்கிறேன் என்று அவர் சொன்னதை மணவை ஆதரித்தார். ஈழத்தளபதிகளுள் ஒருவரான நவரத்தினம் அவர்களும் விடுதலைக்காகத் தாடி வளர்ப்பதை எடுத்துக் கூறினர்.

கடைசியாக எல்லோரும் எதிர்பார்த்த பெருஞ்சித்திரனர் எழுந்தார். தனித்தமிழியக்கத் தலைவர் அவர். தமிழ் நாட்டு மக்களை விட ஈழமக்களுக்கு நன்கு அறிமுகமானவர். புடம் போட்டெடுத்த தங்கம். ஆம்! தமிழுரிமை பேணிய ஒரே "பிழை"க்காகப் பிழைக்க வந்த பேர்வழிகள் அவரை ஓராண்டு சென்னைச் சிறையில் அடைத்துப் போட்ட போதும், அடி உதை எனப் "பரிசுகள்" விழுந்தபோதும் மயக்கமோ கலக்கமோ அறிந்தாரில்லை அவர்.

ஈழ நிலையை விரித்துரைக்கையிலேயே இந்தியத் துணைக்கண்டத்தில் நிலவும் நிலைகளையும் விளக்கினர். நிலைகளை மட்டுமா விளக்கினர்; நம்மிடையே பிறந்துவிட்ட கலைகளையும் வதக்கினர்!

"உலகெங்கும் தமிழர்கள் அடிமைகளாய் உள்ளனர், இப்படித் தமிழன் தாழ் நிலையில் இருப்பதை நம்மைவிட வேகமாகப் புரிந்துகொண்டவர்கள் ஈழத்தமிழர்கள். அவர்கள் அவ்வாறு உணரக் காரணமாயிருந்தவர் 'செல்வா' அவர்கள்!" என்றும்.

"ஈழம் விடுதலை பெறுமானல் தமிழகமும் விடுதலை பெறும்!" என்றும்—

"தந்தை செல்வா அவர்களது நினைவு நாளை ஈழத் தமிழர் உரிமைப்போராட்ட நாள் என எண்ண வேண்டாம், உண்மையில் உலகத் தமிழர் அனைவருக்கும் இது உரிமைப் போராட்ட நாளாகும்!" என்றும் அவர் பல கருத்து மணிகளை முரசறைந்தார்.

உலகமெங்கணும் 50 நாடுகளில் பதின் மூன்றரைக் கோடித் தமிழர்கள் உள்ளனர்; ஆனல் அவர்களுக்கு என்று ஒரு நாடு இல்லையே என்றபோது, அரசியல் விழிப்பு பாமரர்கள் மனதில் கூட ஏற்பட்டது!

பேச்சின் முடிவில் அவர் அறைந்த முரசம் இது! "தமிழர்களுக்கு (மாற்ருர்) எங்கெல்லாம் உரிமைகளை மறுக்கிருர்களோ எங்கெல்லாம் அடிப்படை உரிமைகளை மறுக்கிருர்களோ, அங்கெல்லாம் 'செல்வாக்கள்' தோன்றுவார்கள்; 'பெரியார்கள் தோன்றுவார்கள்; அண்ணுக்கள் தோன்றுவார்கள்; 'கலைஞர்கள் தோன்றுவார்கள்!"

ஆம்! பெருஞ்சித்திரனர் சொல்வது உண்மையே! சீண்டப்பட்ட புலிசீறியே தீரும்! அடக்கப்பட்ட இனம் ஆர்ப்பரித்தே தீரும்!

இந்தியாவில் கூட்டங்களுக்கு நேரக்கட்டுப்பாடு உண்டு. எனவே பெருஞ்சித்திரனர் சுருக்கமாகவே தன் பேச்சை முடித்துக் கொள்ளவேண்டியதாயிற்று. ஆனல், அந்தச் சுருக்கம் ரத்தினச் சுருக்கம்! இடி மழை முழக்கம்!

தோழர் நாகப்பன் நன்றி கூறினர் கூட்டத்துக்கு!

தன்னையே அழித்துக் கொண்டு தமிழ் ஈழ மாந்தர்க்கு உழைத்த தந்தை செல்வாவுக்கு யார் நன்றி கூறுவர்? எப்படி நன்றி கூறுவர்?

தமிழர்கள் தான் நன்றி கூற வேண்டும்! தமிழ்ஈழம் காண உழைப்பதன் மூலம் தான் நன்றி கூறவேண்டும்!

ஒல்லும் வகையெல்லாம் ஈழப் போர் வெல்லும் படியாக உதவியே நன்றி கூற வேண்டும்!

# ஜெயக்குமாரை ..

—1-ம் பக்கத் தொடர்

யில் கத்திய பின்புதான் காவல்துறையினர் அங்கு வந்து நெருப்பை அணைத்துள்ளார்கள்.

(சபையில் கூச்சல்)

"இங்கு அங்கத்தினர்கள் அந்தச் சம்பவங்களையிட்டு சந்தோஷப்படுகிருர்கள் போல் தெரிகிறது. என்ன செய்து கொண்டிருக்கிருர்கள் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

"பல இளைஞர்கள் இந்த மாதிரி சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகிருர்கள்.

"கடந்த அரசாங்கத்தில் இழைக்கப்பட்டது மாதிரியே இந்த அரசாங்கமும் சித்திரவதை செய்ய முயற்சிக்கிறது.

சரணடைந்த இளைஞர்களையிட்டு ஜனதிபதி உறுதி மொழிதந்திருக்கிருர். இந்த இளைஞர்கள் எமக்குத் தெரிந்தவரை எதுவித சித்திரவதைக்கும் ஆளாக்கப்படவில்லை.

"2 ஆயிரத்து 500 வருட நாகரீகம் உள்ள எமதுஇனத்தவர்கள் சித்திரவதைக்கு ஆட்படுத்தப்படுகிருர்கள்.

## வாகனங்கள் சோதனை

"இரண்டாவது விடயம், காவல்துறையினரும் இராணுவத்தினரும் எந்த அனுமதியுமின்றி வீதிகளில் வாகனங்களை நிறுத்தி சோதனையிடுகிருர்கள்.

"விசாரணை செய்யும் போது கடைப்பிடிப்பதற்கு என்று நாட்டில் சில சட்டங்கள் உள்ளன.

இராணுவத்தினரும், காவல்துறையினரும் வீடுகளுக்குள் புகுந்து நடத்தும் தேடுதல்களை, மனித உரிமைகளில் நம்பிக்கை இருந்தால் அனுமதிக்க முடியாது.

"நானும் இன்னும் நான்கு பேரவை உறுப்பினர்களுமாக யாழ்ப்பாணத்தில் கட்சிக்கமிட்டி கூட்டம் ஒன்றுக்கு காரில் சென்ற போது நான்கு இடங்களில் மறித்து சோதனையிடப்பட்டோம். இதை நான் ஒரு பிரச்சினையாக எழுப்பவில்லை"

பேரவைத்தலைவர்: 'இல்லை இதையிட்டு நீங்கள் பிரச்சினை எழுப்ப வேண்டும்"

பிரதமர். எப்போது அது நடந்தது"

திரு. அமிர்தலிங்கம் "ஒவ்வொரு நாளும்தான் இந்த மாதிரி நடைபெறுகிறது"

(சபையில் கூச்சல்)

பேரவைத்தலைவர்: உறுப்பினர்கள் இதைக்கவனிக்க வேண்டும். இன்று அவருக்கு நடப்பது தான் நாளை உங்களுக்கும் நடக்கலாம்.

அரசுதரப்பு எம். பிக்கள்! 'உங்களுக்கும்முன்புநடந்தது'

பேரவைத்தலைவர்: (திரு. அமிர்தலிங்கத்திடம்) 'இதை எழுத்தில் பிரதமருக்கு கொடுங்கள் அது மிகவும் பாரதூரமான விஷயம்"

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசியதாவது!

"ஆனையிறவில் எமது கார் சென்றபோது காரை சோதனையிட வந்தவர். "உள்ளே இருப்பது எதிர்க்கட்சித்தலைவர்" என்று மற்ற காவல்துறை உத்தியோகத்திரிடம் சொன்னர். அவர் யாராயிருந்தாலும் எமக்குக் கவலையில்லை என்று அப்போது இன்னுமொரு காவல்துறை உத்தியோகத்தர் கூறினர்".

பேரவைத்தலைவர்: அப்படியா? இது மிகவும் பாரதூரமான விஷயம். இது பற்றி நீங்கள் ஏன் பிரதமரிடம் தெரிவிக்கவில்லை?"

"வண. பிதா. ஜோசப்மேரி அடிகளாருக்கும் ஒரு சம்பவம் நடைபெற்றது. இவர் காரிலிருந்து இறங்கி திரும்பிப்பார்த்த போது இராணுவத்தினர் துப்பாக்கிகளை இவர்மீது குறி வைத்து நீட்டிப் பிடித்தவாறு வந்து கொண்டிருந்தனர். மட்டக்களப்பைச் சேர்ந்த ஜோசப் மேரி அடிகளார் வவுனியாவில் தேவாலய பூஜை ஒன்றுக்காக சென்று கொண்டிருந்தார்.

"கிளிநொச்சியில், வண. பிதா, மைக்கல்கர்சனை இரு கைகளையும் உயர்த்திப் பிடித்தவாறு வரச்சொன்னர்கள்.

"முன்பு அவசரகாலச் சட்டத்தின் கீழ்தான் இந்த மாதிரி நடைபெற்றது. இப்போது சட்டத்துக்குபணிந்து நடக்கும் கௌரமான மக்களுக்கு எதிராகவும் இந்த மாதிரி நடை பெறுகிறது.

"என்ன நடை பெறுகிறது என்பதை விசாரித்துப்பாருங்கள். இவை எல்லை மீறிய செயல்கள். உணர்ச்சிகளைத் தூண்டிவிடுபவை.

## இளைஞர்கள் கைது

"மூன்ருவது விடயம், கிளிநொச்சியில் 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். 25-5-78இல் இவர்கள் சுற்றிவளைக்கப்பட்டனர்.

"ஏன் எங்களைக் கைது செய்கிறீர்கள் என்று இவர்களில் ஒருவர் கேட்க, சிலர் ஜனதிபதிக்கு பெட்டிசன் அனுப்பியதாகவும், அதன் பேரில் கைதுசெய்வதாகவும் பதில் கூறியுள்ளனர்.

"கனகசூரியர் தான் இந்த பெட்டிசனை அனுப்பி வைத்திருக்கிருர் என்று நான் நினைக்கின்றேன்"

அமைச்சர் திரு. காமினி திஸாநாயக்கா: "கனகசூரியர் ஐ.தே.கட்சியின் அமைப்பாளராக பெயர் அறிவிக்கப்பட்டு 2 நாட்களில் அவர் தாக்க பட்டார்."

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து கூறியதாவது:-

"கனகசூரியர் 5-2-77 இல் காவல்துறையினருக்கு கொடுத்த வாக்குமூலத்தின் உறுதப்படுத்தப்பட்ட பிரதி என்னிடம் உள்ளது.

"பரந்தனில் பாலசிங்கத்தின் வீட்டில் வைத்து கனகசூரியர் தாக்கப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 2ஆயிரம் ரூபாவையும் கைக் கடிகாரத்தையும் அவர்கள் பறித்துக் கொண்டு சென்றுள்ளனர். கனகசூரியரே கொடுத்துள்ளவாக்கு மூலத்திலிருந்து இதற்கு அரசியல் காரணம் எதுவும் இல்லை என்று தெரிகிறது.

"கைது செய்யப்பட்டுள்ள 7 பேரில் ஒருவரான ஞானராசாவுக்கு நேற்றுமுன் தினம் திருமணம் நடந்திருக்க வேண்டும். திருமணத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த வேளையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

"இவர்கள் ஏன் கைது செய்யப்பட்டார்கள்? ஜனதிபதிக்கு யாராவது பெட்டிசன் அனுப்பி வைத்தால், உடனே அதில் சொல்லப்பட்டவர்களை கைதுசெய்ய வேண்டும் என்று காவல் துறையினர் நினைத்துள்ளார்கள்.

"காரணமோ, குற்றச்சாட்டோ இல்லாது இவ்வாறு ஒரு பெட்டிசன் மீது எவரையும் கைது செய்வது சட்டவிரோதம் இவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு இல்லையென்ருல் விடுதலை செய்யுமாறு கோருகிறேன்.

"குற்றச்சாட்டு இருந்தால் வழக்கு தாக்கல் செய்யுங்கள். ஆனல் எனக்குத் தெரிந்தவரையில் அவர்கள் எந்தத் தவறையும் செய்யவில்லை"- இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் பேசினர்.

[பேரவைத் தணிக்கைக் குழுவினல் பத்திரிகைகளில் பிரசுரத்துக்காக அனுமதிக்கப்பட்ட பகுதியே இங்கு இடம்பெற்றுள்ளது ]

# பொலிசார் உங்களை தவருக வழி....

—3-ம் பக்கத் தொடர்

காவல்துறையினர் யாழ்ப்பாணத்தில் அல்லது கொழும்பில் உள்ள அவரது இல்லங்களுக்குச் சென்ருர்களா? அல்லது சட்டக் கல்லூரிக்குச் சென்று அவரைத் தேடினர்களா?

நீங்கள் தவருன வழியில் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறீர்கள்; உங்களுக்குக் கூறப்பட்டவற்றை அப்படியே நம்பியிருக்கிறீர்கள் என்பதைக் காட்டுவதற்குத்தான் நான் இவற்றை இங்கு கூறுகிறேன். தயவு செய்து அப்படி நடந்து கொள்ளாதீர்கள். உண்மையாகவே நிலைமை ஆபத்தானது; வெள்ளம் தலைக்கு மேலே வந்து விட்டதென்று நீங்கள் நம்பினல் நீங்கள் நடவடிக்கை எடுக்கலாம், அது பற்றி எவ்வித ஐயமும் இல்லை. அப்படி நடவடிக்கைஎடுத்தால் நாங்கள் உங்களைக் குறை சொல்லப்போவதில்லை தயவு செய்து உங்களுக்குத் தரப்படும் தகவல்களையெல்லாம் புனிதமான உண்மைகள் என்று நம்பி ஏற்றுக் கொள்ளாதீர்கள் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்,

ஐயா இச்சட்டமூலம் பற்றிய வேறு சில விடயங்கள் பற்றியும் கருத்துத் தெரிவிக்க விரும்பினலும் நாளை எனது நண்பர்கள் அது பற்றிக் கூறுவார்கள் என நம்பி அவற்றைக் கூருது விடுகிறேன்.

ஆனல் நாளை இச்சட்டமூலம் பற்றிய விவாதம் ஆரம்பிக்கப்படுமுன்னர் அரசைச்சார்ந்த யாராவது இச்சுவரொட்டி தொடர்பாக என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று கூறவேண்டும் என விரும்புகிருேம், இவர்களை விசாரணை செய்ய கண்டறிய எவ்வித நடவடிக்கையும்மேற்கொள்ளப்படவில்லை என்று நீங்கள் திருப்தியடைந்தால் அவை ஒட்டப்பட்டுள்ள இடங்களிலிருந்து அவற்றை அகற்றுவீர்களா?

இப்புகைப்படங்களை வெளியிட்டதன் பின்னணியிலுள்ள கபடமான, வஞ்சகமான நோக்கத்தை நான் அறிவேன். இப்புகைப்படங்களை வெளியிட்ட பின் அப்பாவிகளான இவ்விளைஞர்கள் என்ன செய்வார்கள்? காவல்துறையினரின் வன்செயல்களுக்குப் பயந்து அவர்கள் தலைமறைவாகி விடுவார்கள்: அதன் பின் உங்களுக்கு வேட்டை நிகழ்த்த அதிக புலிகள் அகப்படும்; சோதனையிட அதிக வீடுகள் இருக்கும். நிறுத்துவதற்கு அதிக பேருந்துகள் கிடைக்கும்; பல வீதித் தடைகளை நிறுவ உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

தயவுசெய்து இதுபற்றி விசாரணை நிகழ்த்துங்கள். தயவுசெய்து காவல்துறைமா அதிபரை அழைத்து அவர் உரியவர்களுடைய இருப்பிடங்களை அறிய முயலாது இப்புகைப்படங்களை வெளியிட அனுமதி அளித்தது ஏன் என விசாரித்து அறிய முயற்சிசெய்யுங்கள். அதன்பின் உங்கள்நல்லெண்ணம் பற்றி நாம் திருப்தி அடைவோம்,

காவல்துறையின் சிலபகுதியினர் உருவாக்கிவிட்ட பூதாகரமான படத்தை உண்மையென்று நம்பிவிட்ட காரணத்தினலேயே நீங்கள் இச்சட்டமூலத்தை உருவாக்கியிருக்கிறீர்கள். 'அவர்கள் உருவாக்கிய போலி உருவை நீங்கள் நம்ப மறுத்திருந்தால் நீங்கள் இத்தகைய ஒரு சட்டமூலத்தைக் கொண்டு வருவது பற்றி எண்ணிக்கூடப் பார்த்திருக்கமாட்டீர்கள்.

நான் இவ்விபரங்களையும் செயல்முறைகளையும் அரசுக்கு வழங்கியுள்ளேன். அவர்கள் நாளை எமக்குப் பயனுள்ள சில விடயங்களைக் கூறுவார்கள் என்று நம்புகிறேன்.

## விற்பனைக்கு

குறுகிய காலத்தில் கூடுதல் பயன் தரக்கூடிய நல்ல இன செவ்விழ நீர்க்கன்றுகள் விற்பனைக்குண்டு,

மில்க்வைற் யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு' வெளியிடப்பட்டது! அச்சுப் பதிப்பு! வஸ்தியன் அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org